रेल भर्ती बोर्ड / RAILWAY RECRUITMENT BOARD
सी ई एन - 06/2025 - CEN - 06/2025
एनटीपीसी (स्नातक स्तर) की भर्ती / Recruitment of NTPC Graduate Level

# RRB NTPC GRADUATE 2025 CBT 2

Graduate Level | CEN 06/2025

**TAMIL ANSWER KEY**

## Official Answer Key with Solutions

All 1 Shifts · 10-07-2026 to 10-07-2026

| | |
|---|---|
| **Questions** | 120 |
| **Marking** | +1 correct / -1/3 wrong |
| **Duration** | 90 minutes |
| **Sections** | Maths 35 · Reasoning 35 · General Awareness 50 |

Every paper here is the official RRB response sheet with the correct answer marked.

### HOW TO USE THIS BOOK

1. Open the INDEX on the next page.
2. Click any row to jump straight to that date and shift.
3. Correct options are ticked in green, wrong ones crossed in red.
4. Use the bookmarks panel of your PDF reader to move between shifts.

Check your marks, normalized score and zone-wise rank free at
**rank.qmaths.in**


**Blackbook**

Score & Rank Calculator · rank.qmaths.in

Compiled 10 September 2026

# INDEX · Click any row to open that paper

RRB NTPC Graduate 2025 (Tamil) · 1 shifts


| DAY | DATE | SHIFT | TIME | PAGE |
| --- | --- | --- | --- | --- |
| Day 1 | **10-07-2026** | Shift 1 | 09:00 - 10:30 | 3 |

रेल भर्ती बोर्ड / RAILWAY RECRUITMENT BOARD

सी ई एन - 06/2025 - CEN - 06/2025

एनटीपीसी (स्नातक स्तर) की भर्ती / Recruitment of NTPC Graduate Level

| | |
|---|---|
| Test Center Name | iON Digital Zone iDZ Tirunelveli |
| Test Date | 10/07/2026 |
| Test Time | 9:00 AM - 10:30 AM |
| Subject | RRB NTPC GRADUATE CBT 2 |

*** Note**

**Correct Answer will carry 1 mark per Question.**

**Incorrect Answer will carry 1/3 Negative mark per Question.**

**1. Options shown in green color with a tick icon are correct.**

**2. Chosen option on the right of the question indicates the option selected by the candidate.**

Section : **RRB NTPC GRADUATE CBT 2**

**Q.1** "O ஐ பொது மையமாகக் கொண்ட இரு பொதுமைய வட்டங்களில், வெளி வட்டத்தின் நாண் AB ஆனது உள் வட்டத்தை C மற்றும் D ஆகிய புள்ளிகளில் வெட்டுகிறது. மையத்திலிருந்து நாணிற்கு உள்ள தொலைவு 3 cm, வெளி வட்டத்தின் ஆரம் 13 cm மற்றும் உள் வட்டத்தின் ஆரம் 7 cm எனில், AC இன் நீளம் (cm இல்) என்ன?

**Ans**

✗ A. $5\sqrt{10}$

✓ B. $2\sqrt{10}$

✗ C. $3\sqrt{10}$

✗ D. $4\sqrt{10}$

**Q.2** O ஐ மையமாகக் கொண்ட வட்டத்திற்கு, வெளிப்புறப் புள்ளியான Q இலிருந்து PQ மற்றும் QR ஆகிய இரண்டு தொடுகோடுகள் வரையப்படுகின்றன. OQ = 41 cm $\angle PQR$ = 60° மற்றும் வட்டத்தின் ஆரம் 9 cm எனில், $\triangle$PRQ இன் சுற்றளவைக் கண்டறியவும்.

**Ans**

✗ A. 80 cm

✗ B. 95 cm

✗ C. 135 cm

✓ D. 120 cm

**Q.3** கொடுக்கப்பட்ட தொடரை தர்க்கரீதியாக முழுமையாக்க பின்வரும் எழுத்து-எண் தொகுப்புகளில் எது கேள்விக்குறிக்கு (?) பதிலாக வரும்?

KDW 25, NGZ 35, QJC 55, TMF 95, WPI 175, ?

**Ans**

✗ A. LSL 335

✗ B. ZSG 335

✓ C. ZSL 335

✗ D. ZML 335

Generated by rank.qmaths.in

Get the Toppers Choice
BLACKBOOK VOCAB APP - Download Now
GET IT ON Google Play

**Q.4** ஒரு புதிய பூச்சிக்கொல்லி மருந்தானது, ஒரு விவசாய வயலில் உள்ள பூச்சிகளின் எண்ணிக்கையைக் குறைக்கிறது. பறவைகள், தாவரங்கள் மற்றும் சிதைப்பிகளின் பங்குகளைக் கருத்தில் கொண்டு, அந்த வயலின் உணவு வலையில் ஏற்படக்கூடிய மிகவும் சாத்தியமான தாக்கத்தைக் கணிக்கவும்.

Ans
✔ A. பறவைகளுக்கான பூச்சி இரைகள் குறைவதன் காரணமாக, பறவைகளின் எண்ணிக்கை குறையக்கூடும்; இது ஆற்றல் ஓட்டத்தை மாற்றியமைக்கும்

✘ B. அதிகப்படியான இறந்த கரிமப் பொருட்கள் காரணமாக, சிதைப்பிகளின் எண்ணிக்கை கணிசமாக அதிகரிக்கும்

✘ C. சூழல் மண்டலத்திற்குள் உள்ள அனைத்து ஊட்ட நிலைகளிலும் ஆற்றல் ஓட்டம் நின்றுவிடும்

✘ D. மகரந்தச்சேர்க்கையாளர்கள் இல்லாததால் தாவரங்களின் எண்ணிக்கை வியத்தகு முறையில் குறையும்

**Q.5** ஒவ்வொன்றும் 216 $cm^3$ என்ற கனஅளவு கொண்ட இரு கனசதுரங்கள் அவற்றின் முனைகள் ஒன்றோடு ஒன்று ஒன்றாக இணையுமாறு அடுத்தடுத்து இணைக்கப்படுகின்றன. இதனால் உருவாகும் புதிய கனசெவ்வகத்தின் மூலைவிட்டத்தின் நீளத்தைக் காண்க.

Ans
✘ A. $5\sqrt{2}$ cm

✘ B. $7\sqrt{3}$ cm

✔ C. $6\sqrt{6}$ cm

✘ D. $8\sqrt{7}$ cm

**Q.6** தொடக்கத்தில் ஓய்வு நிலையில் உள்ள ஒரு பெட்டி வலதுபுறமாக 30 N விசையுடன் தள்ளப்படுகிறது; அதேவேளையில், உராய்வு விசை இடதுபுறமாக 30 N விசையைச் செலுத்துகிறது. அப்பெட்டியின் இயக்கத்தில் என்ன மாற்றம் ஏற்படும்?

Ans
✘ A. பெட்டி வேகம் குறைந்து நிற்கிறது.

✘ B. பெட்டி எதிர் திசையில் நகர்கிறது.

✘ C. பெட்டி வலதுபுறமாக முடுக்கமடைகிறது.

✔ D. பெட்டி ஓய்வு நிலையில் உள்ளது.

**Q.7** பின்வரும் சமன்பாட்டில் '+' மற்றும் '–' ஆகியவை ஒன்றுக்கொன்று மாற்றப்பட்டு மற்றும் '×' மற்றும் '÷' ஆகியவை ஒன்றுக்கொன்று மாற்றப்படுகிறது எனில், கேள்விக்குறிக்குப் (?) பதிலாக என்ன வரும்?

108 × 4 – 13 + 4 ÷ 7 = ?

Ans
✘ A. 14

✔ B. 12

✘ C. 16

✘ D. 10

**Q.8** ஒரு குறிப்பிட்ட குறியீட்டு மொழியில்,
A + B என்றால்'A என்பவர் B இன் தாய்'
A – B என்றால்'A என்பவர் B இன் சகோதரர்',
A x B என்றால்'A என்பவர் B இன் மனைவி',
A % B என்றால்'A என்பவர் B இன் தந்தை', மற்றும்
A #B என்றால்'A என்பவர் B இன் மகள்'
பின்வருவனவற்றில் எது, Q என்பவர் L-இன் மனைவியின் சகோதரி என்பதைக் குறிக்கிறது?
I. V % Q # K + Z – T x L
I. V + Q # K % Z – T + L
I. V # K x Q % L + T # Z
/. V + Q # G – Z % T + L
11004

Ans
✔ A. Only I மட்டும்

✘ B. I மற்றும் III ஆகிய இரண்டும்

✘ C. II மற்றும் IV ஆகிய இரண்டும்

✘ D. IV மட்டும்

Get the Toppers Choice
BLACKBOOK VOCAB APP - Download Now
GET IT ON Google Play

**Q.9** V, U, T, O, N, M மற்றும் L ஆகிய ஒவ்வொருவரும் ஒரே ஆண்டில் ஜனவரி முதல் டிசம்பர் வரையிலான வெவ்வேறு மாதங்களில் (ஜனவரி, மார்ச், மே, ஜூன், ஜூலை, செப்டம்பர் மற்றும் டிசம்பர்) பிறந்தனர்.
M ஐ விட இருவர் மட்டுமே மூத்தவர்கள். L மற்றும் M க்கு இடையே இருவர் மட்டுமே பிறந்தனர். U என்பவர் மட்டுமே O ஐ விட மூத்தவர். T என்பவர் N ஐ விட மூத்தவர், ஆனால் V ஐ விட இளையவர்.
T மற்றும் U க்கு இடையே எத்தனை பேர் பிறந்தனர்?

**Ans**
- ✗ A. ஒருவர்
- ✗ B. நான்கு
- ✓ C. மூன்று
- ✗ D. இரண்டு

**Q.10** ஆங்கில அகரவரிசையின் அடிப்படையில், பின்வரும் நான்கு எழுத்து-தொகுப்புகளில் மூன்று ஒரு குறிப்பிட்ட வழிமுறையில் ஒரே போல உள்ளது, இதனால் ஒரு குழுவை உருவாக்குகிறது. எந்த எழுத்து தொகுப்பு அந்த குழுவில் சேராதது ஆகும்?
(குறிப்பு: மாறுபட்ட ஒன்றானது எழுத்து-தொகுப்பில் உள்ள மெய்யெழுத்துக்கள்/உயிரெழுத்துகளின் எண்ணிக்கை அல்லது அவற்றின் நிலை ஆகியவற்றின் அடிப்படையில் இல்லை.)

**Ans**
- ✗ A. ORM
- ✗ B. RUP
- ✗ C. GJE
- ✓ D. LMK

**Q.11** What is the primary advantage of converting an MS PowerPoint presentation to PDF format?

**Ans**
- ✓ A. Ensures universal viewing without requiring PowerPoint software
- ✗ B. Significantly reduces file size while maintaining visual quality
- ✗ C. Automatically applies document encryption and password protection
- ✗ D. Enables cross-platform editing with multiple software applications

**Q.12** பிரிட்டிஷாரின் விவசாயச் சுரண்டலை எதிர்த்து, 19 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில், வயநாடு பகுதியைச் சேர்ந்த கேரளாவின் முதல் விவசாயப் பழங்குடியினரால் 1812 இல் ஒரு பழங்குடி எழுச்சி ஏற்பாடு செய்யப்பட்டது. இந்தக் கிளர்ச்சி ____ என்று அழைக்கப்படுகிறது.

**Ans**
- ✗ A. குறும்பர் கிளர்ச்சி
- ✗ B. காடர் பழங்குடியின கிளர்ச்சி
- ✓ C. குறிச்சியா புரட்சி
- ✗ D. கோயா புரட்சி

**Q.13** ஒரு செவ்வக வடிவ உலோகத் தகட்டின் நீளம் 56 cm மற்றும் அகலம் 40 cm ஆகும். அதன் ஒவ்வொரு மூலையிலிருந்தும் 10 cm பக்க அளவுள்ள ஒரு சதுரம் வெட்டி எடுக்கப்படுகிறது. மீதமுள்ள தகட்டைக் கொண்டு ஒரு மூடிய பெட்டி செய்யப்படுகிறது. நீளம் 4.0 cm, அகலம் 2.0 cm மற்றும் உயரம் 1.5 cm கொண்ட எத்தனை தீப்பெட்டிகளை அந்தப் பெட்டிக்குள் வைக்கலாம்?

**Ans**
- ✓ A. 600 பெட்டிகள்
- ✗ B. 620 பெட்டிகள்
- ✗ C. 550 பெட்டிகள்
- ✗ D. 610 பெட்டிகள்

Get the Toppers Choice
BLACKBOOK VOCAB APP - Download Now
GET IT ON Google Play

**Q.14** Refer to the following letter, number, symbol series and answer the question. Counting to be done from left to right only.

(Left) Y 7 H # 4 B Q $ 3 L 9 @ N 8 X Z * & T 2 R (Right)

How many such symbols are there which are immediately preceded by a number and also immediately followed by a letter?

**Ans**
- ✗ A. None
- ✗ B. Two
- ✗ C. Three
- ✓ D. One

**Q.15** பின்வரும் சமன்பாட்டில் '+' மற்றும் '–' ஆகியவை ஒன்றுக்கொன்று பரிமாற்றப்பட்டு, மற்றும் 'x' மற்றும் '÷' ஆகியவை ஒன்றுக்கொன்று பரிமாற்றப்படுகிறது எனில், '?' க்கு பதிலாக என்ன வரும்?

42 x 3 – 25 ÷ 5 + (56 x 8) ÷ 2 – 24 = ?

**Ans**
- ✗ A. 167
- ✗ B. 132
- ✓ C. 149
- ✗ D. 158

**Q.16** 750 மீட்டர் நேர்கோட்டு ஓட்டப்பந்தயத்தில், X என்பவரால் Y என்பவரை 10 மீட்டர் வித்தியாசத்தில் வீழ்த்த முடியும். 444 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில், Y என்பவரால் Z என்பவரை 6 மீட்டர் வித்தியாசத்தில் வீழ்த்த முடியும். 150 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில், X என்பவரால் Z என்பவரை எத்தனை மீட்டர் வித்தியாசத்தில் வீழ்த்த முடியும்?

**Ans**
- ✗ A. 6
- ✗ B. 2
- ✗ C. 3
- ✓ D. 4

**Q.17** தீவிரவாதிகளின் அணுகுமுறை மிதவாதிகளின் அணுகுமுறையிலிருந்து முக்கியமாக மாறுபட்டிருந்தது, ஏனெனில் தீவிரவாதிகள் ___.

**Ans**
- ✗ A. பொது நலனுக்காக தேசிய பொருளாதாரக் கொள்கைகளைப் பயன்படுத்துவதை எதிர்த்தது
- ✗ B. நிர்வாகச் சீர்திருத்தங்களை மட்டுமே சுவராஜ்ஜியத்திற்கான ஒரே பாதையாக முன்னிறுத்தினர்
- ✓ C. வெகுஜன பங்கேற்பு மற்றும் நேரடி அரசியல் போராட்டத்தை வலியுறுத்தப்பட்டது
- ✗ D. அரசமைப்புச் சட்டத்திற்குட்பட்ட பேச்சுவார்த்தைகளை மட்டுமே பரிந்துரைத்தனர்

**Q.18** சுருக்குக: $\frac{(2^4 \times 3^4 \times 5^4)}{(2^2 \times 3^2 \times 5^2)}$

**Ans**
- ✗ A. 909
- ✗ B. 910
- ✓ C. 900
- ✗ D. 905

**Q.19** 4, 6, 8, 10, 12, 14 ஆகிய தரவுகளின் இடைநிலையை (Median) கண்டறியவும்.

**Ans**
- ✗ A. 11
- ✗ B. 8
- ✓ C. 9
- ✗ D. 10

Get the Toppers Choice
BLACKBOOK VOCAB APP - Download Now
GET IT ON Google Play

**Q.20** ஒரு சட்டையின் விலை 20% அதிகரிக்கப்பட்டு, பின்னர் 20% குறைக்கப்படுகிறது. விலையில் ஏற்படும் நிகர சதவீத மாற்றம் என்ன?

**Ans**
✔ A. 4% குறைவு
✘ B. எந்த மாற்றமும் இல்லை
✘ C. 0.4% அதிகரிப்பு
✘ D. 8% குறைவு

**Q.21** பின்வருவனவற்றில் 2 பொருளாதார வல்லுநர்களுடன் இணைந்து, 2025 ஆம் ஆண்டுக்கான பொருளாதார அறிவியலுக்கான நோபல் பரிசு யாருக்கு வழங்கப்பட்டது?

**Ans**
✘ A. தாமஸ் பிக்கெட்டி
✔ B. ஜோயல் மோகிர்
✘ C. பால் க்ருக்மேன்
✘ D. டாரோன் அசெமோக்லு

**Q.22** ராகுலின் வயதுக்கும் அவரது மகனின் வயதுக்கும் உள்ள விகிதம் 7 : 2 ஆகும். ராகுலின் வயது 49 என்றால், அவரது மகனின் வயது என்ன?

**Ans**
✔ A. 14 ஆண்டுகள்
✘ B. 15 ஆண்டுகள்
✘ C. 12 ஆண்டுகள்
✘ D. 13 ஆண்டுகள்

**Q.23** கொடுக்கப்பட்ட நேரிய சமன்பாடுகளின் தொகுப்பு (system of linear equations) எண்ணிக்கையற்ற (முடிவிலி) பல தீர்வுகளைக் கொண்டுள்ளது.

$3x + 7y = 15$
$ax + by = 30$

a மற்றும் b இன் மதிப்புகள் யாவை?

**Ans**
✔ A. a = 6; b = 14
✘ B. a = 7; b = 3
✘ C. a = 14; b = 6
✘ D. a = 3; b = 7

**Q.24** How can you vertically center the text inside selected cells of a table in MS Word 2021?

**Ans**
✔ A. Right-click selection > Table Properties > Cell tab > Vertical alignment: Center
✘ B. Home tab > Paragraph group > Align Right
✘ C. Home tab > Paragraph group > Justify
✘ D. Home tab > Paragraph group > Align Left

**Q.25** சுஷாந்த் மற்றும் வருண் 400 மீட்டர் நீளமுள்ள ஒரு வட்டப்பாதையில் ஓடுகின்றனர். சுஷாந்த் ஒரு சுற்றை 100 வினாடிகளிலும், வருண் ஒரு சுற்றை 80 வினாடிகளிலும் முடிக்கிறார்கள். இருவரும் ஒரே புள்ளியிலிருந்து ஒரே நேரத்தில் எதிர் திசைகளில் ஓடத் தொடங்குகிறார்கள். அவர்கள் இருவரும் மீண்டும் தொடக்கப் புள்ளிக்கு ஒன்றாகத் திரும்புவதற்கு முன், எத்தனை முறை சந்திப்பார்கள்?

**Ans**
✔ A. 8
✘ B. 9
✘ C. 10
✘ D. 12

Blackbook

Get the Toppers Choice
BLACKBOOK VOCAB APP - Download Now
GET IT ON Google Play

**Q.26** வடக்கு நோக்கி ஒரு வரிசையில் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான நபர்கள் அமர்ந்துள்ளனர். E அந்த வரிசையின் இடதுப்புறத்தில் கடைகோடி முனையில் அமர்ந்துள்ளார். E மற்றும் F ஆகியோருக்கு இடையே சரியாக ஏழு நபர்கள் அமர்ந்துள்ளனர். A என்பவர் F க்கு வலதுபுறத்தில் மூன்றாவது இடத்தில் அமர்ந்துள்ளார். C மற்றும் B ஆகியோருக்கு இடையே சரியாக நான்கு நபர்கள் அமர்ந்துள்ளனர். C என்பவர் E மற்றும் F ஆகியோருக்குச் சரியாக இடையில் அமர்ந்துள்ளார். B மற்றும் D ஆகியோருக்கு இடையே சரியாக நான்கு நபர்கள் அமர்ந்துள்ளனர். D என்பவர் ஏதேனும் ஒரு கடைகோடி முனையில் அமர்ந்துள்ளார். அந்த வரிசையில் அமர்ந்துள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை என்ன?

**Ans**
- ✗ A. 10
- ✗ B. 12
- ✓ C. 15
- ✗ D. 8

**Q.27** ஒரு குறிப்பிட்ட கூட்டு வட்டி வீதத்தில், ஆண்டுக்கு ஒருமுறை வட்டி கணக்கிடப்படும்போது, ஒரு குறிப்பிட்ட தொகையானது 7 ஆண்டுகளில் தன்னைப்போல் 3 மடங்காக மாறுகிறது. எனில், அது எத்தனை ஆண்டுகளில் தன்னைப்போல் 27 மடங்காக மாறும்?

**Ans**
- ✗ A. 11 ஆண்டுகள்
- ✗ B. 23 ஆண்டுகள்
- ✓ C. 21 ஆண்டுகள்
- ✗ D. 31 ஆண்டுகள்

**Q.28** செல் பகுப்பு மற்றும் செயல்பாட்டின் அடிப்படையில், ஆக்குத்திசுவை (meristematic tissue) பிற தாவரத் திசுக்களிலிருந்து, அதன் எந்தப் பண்பு மிகச் சிறப்பாக வேறுபடுத்துகிறது?

**Ans**
- ✗ A. செல்கள் தாவரம் முழுவதும் நீர் மற்றும் தாதுக்களை கடத்துகின்றன
- ✗ B. செல்கள் அத்தியாவசிய ஊட்டச்சத்துக்களைச் சேமித்து, இருப்புக்களைப் பராமரிக்கின்றன
- ✓ C. செல்கள் தீவிரமாகப் பகுப்படைந்து தாவர வளர்ச்சிக்கு பங்களிக்கின்றன
- ✗ D. தாவர மேற்பரப்பு முழுவதும், செல்கள் ஒரு பாதுகாப்பு உறையை உருவாக்குகின்றன

**Q.29** 10 பக்கங்களைக் கொண்ட ஒரு வடிவத்தின் ஐந்து உட்கோணங்கள் ஒவ்வொன்றும் 185 டிகிரி ஆகும். மீதமுள்ள ஐந்து உட்கோணங்களும் சமம் எனில், அந்த ஐந்து கோணங்களில் ஒவ்வொன்றின் மதிப்பு (டிகிரிக்களில்) எதற்குச் சமம்?

**Ans**
- ✗ A. 107
- ✗ B. 101
- ✗ C. 105
- ✓ D. 103

**Q.30** 12 தொழிலாளர்கள் ஒரு சுவரை 18 நாட்களில் கட்டி முடிக்க முடியும் என்றால், அதே சுவரை 8 தொழிலாளர்கள் எத்தனை நாட்களில் கட்டி முடிப்பார்கள்?

**Ans**
- ✗ A. 30 நாட்கள்
- ✓ B. 27 நாட்கள்
- ✗ C. 32 நாட்கள்
- ✗ D. 36 நாட்கள்

Get the Toppers Choice
BLACKBOOK VOCAB APP - Download Now
GET IT ON Google Play

Q.31 H, I, J, K, U, V, W மற்றும் X ஆகியோர் ஒரு சதுர மேசையைச் சுற்றி மேசையின் மையத்தை நோக்கி அமர்ந்துள்ளனர். அவர்களில் நான்கு நபர்கள் மூலைகளிலும், நான்கு நபர்கள் சரியாக பக்கங்களின் மையத்திலும் அமர்ந்துள்ளனர்.
J மற்றும் W க்கு இடையில் மூன்று நபர்கள் மட்டுமே அமர்ந்துள்ளனர். J என்பவர் எந்த மூலைகளிலும் அமரவில்லை. I என்பவர் W இன் இடதுபுறத்தில் மூன்றாவதாக அமர்ந்துள்ளார். H என்பவர் J இன் இடதுபுறத்தில் இரண்டாவதாக அமர்ந்துள்ளார். V என்பவர் W மற்றும் H ஆகிய இருவருக்கும் உடனடி அருகாமையாளர் ஆவார். U என்பவர் J இன் உடனடி அருகாமையாளர் ஆவார். X என்பவர் W இன் இடதுபுறத்தில் இரண்டாவதாக அமர்ந்துள்ளார்.
K இன் இடதுபுறத்தில் இருந்து எண்ணும் போது K மற்றும் H க்கு இடையில் எத்தனை நபர்கள் அமர்ந்துள்ளனர்?

Ans
- ✗ A. ஒன்று
- ✗ B. மூன்று
- ✓ C. நான்கு
- ✗ D. இரண்டு

Q.32 பேரரசர் அசோகரின் கல்வெட்டுகள் பெரும்பாலும் பின்வரும் எந்த எழுத்து முறையில் எழுதப்பட்டன?

Ans
- ✓ A. பிராமி
- ✗ B. தேவநாகரி
- ✗ C. குப்த எழுத்துமுறை
- ✗ D. கரோஸ்தி

Q.33 ஓமைரா புள்ளி F இல் தொடங்கி, தெற்கு நோக்கி 45 m நடக்கிறார். பின்னர் அவர் இடதுபுறம் திரும்பி, 30 m நடந்து, பின்னர் இடதுபுறம் திரும்பி, 20 m நடந்து, புள்ளி C ஐ அடைந்து நிறுத்துகிறார். அஞ்சன், புள்ளி C க்கு வடக்கு நோக்கி 15 m தொலைவில் உள்ள புள்ளி Q இல் தொடங்குகிறார். அவர் கிழக்கு நோக்கி 30 m நடந்து, இடதுபுறம் திரும்பி, 10 m நடந்து, புள்ளி U இல் நிறுத்துகிறார். புள்ளி F மற்றும் புள்ளி U ஆகியவற்றிற்கு இடையிலான மிகக்குறுகிய தூரம் என்ன? (குறிப்பிடப்படாவிட்டால் அனைத்து திருப்பங்களும் 90° திருப்பங்கள் மட்டுமே)

Ans
- ✗ A. 75 m
- ✗ B. 35 m
- ✓ C. 60 m
- ✗ D. 25 m

Blackbook

Get the Toppers Choice
BLACKBOOK VOCAB APP - Download Now
GET IT ON Google Play

Q.34 இந்த கேள்வியில், எண்/சின்னத்தின் குழு கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகள் மற்றும் பின்வரும் நிபந்தனைகளின்படி எழுத்துக் குறியீடுகளைப் பயன்படுத்தி குறியிடப்படுகிறது. நிபந்தனைகளைப் பின்பற்றும் குறியீடுகளின் சரியான கலவையே உங்கள் பதில். நிபந்தனைகள் எதுவும் பின்பற்றப்படாவிட்டால், அந்தந்த எண்/சின்னத்திற்கான குறியீடுகள் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளபடி நேரடியாக பின்பற்றப்பட வேண்டும்.

| எண் /சின்னம் | 3 | $ | 5 | 1 | @ | % | 2 | & | + | 7 | # | 8 | 4 | 6 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| குறியீடு | W | I | D | M | O | H | Z | T | G | S | U | E | X | V |

நிபந்தனைகள்:
(i) முதல் மற்றும் கடைசி உறுப்புகள் ஆகிய இரண்டும் சின்னங்களாக இருந்தால், அவ்விரு உறுப்புகளுக்கான குறியீடுகள் (முதல் மற்றும் கடைசி உறுப்புகள்) ஒன்றோடொன்று மாற்றப்பட வேண்டும்
(ii) முதல் உறுப்பு ஒற்றைப்படை எண்ணாகவும், கடைசி உறுப்பு இரட்டைப்படை எண்ணாகவும் இருந்தால், முதல் மற்றும் கடைசி உறுப்புகளுக்கு © என்ற குறியீடு இடப்பட வேண்டும்.
(iii) இரண்டாவது மற்றும் மூன்றாவது உறுப்புகள் ஆகிய இரண்டும் செவ்விய வர்க்கங்களாக இருந்தால், மூன்றாவது உறுப்பானது இரண்டாவது உறுப்பிற்கான குறியீட்டைக் கொண்டே குறியிடப்பட வேண்டும்.

பின்வரும் எண்-சின்னத்தின் தொகுப்பிற்கான குறியீடு என்ன?
3 % @ 1 4

Ans
- ✗ A. © M O H ©
- ✓ B. © H O M ©
- ✗ C. W H O M X
- ✗ D. W M O H ©

Q.35 சர்வதேச பேரிடர் அபாயக் குறைப்பு தினம் (IDDRR) 2025 ஆனது எந்த கருப்பொருளின் கீழ் அனுசரிக்கப்படுகிறது?

Ans
- ✗ A. முன்கூட்டிய எச்சரிக்கை அமைப்புகளை வலுப்படுத்துதல் (Strengthening Early Warning Systems)
- ✓ B. மீள்தன்மைக்கு நிதியளித்தல், பேரிடர்களுக்கு அல்ல (Fund Resilience, Not Disasters)
- ✗ C. சமூகங்களை ஒன்றிணைத்து மீண்டும் கட்டியெழுப்புதல் (Rebuilding Communities Together)
- ✗ D. நிலையான எதிர்காலங்களில் முதலீடு செய்தல் (Investing in Sustainable Futures)

Q.36 A user wants to transfer a large file to a colleague over the internet. Which internet service is most suitable for this task?

Ans
- ✗ A. E-mail
- ✓ B. File Transfer Protocol (FTP)
- ✗ C. Instant Messaging
- ✗ D. World Wide Web

Q.37 நீர்ப்பிடிப்புப் பகுதியின் அடிப்படையில், இந்தியாவில் மிகப்பெரிய வடிகால் வடிகால் படுக்கையை (drainage basin) உருவாக்கும் ஆறு பின்வருவனவற்றில் எது?

Ans
- ✗ A. நர்மதா
- ✗ B. கிருஷ்ணா
- ✗ C. கோதாவரி
- ✓ D. கங்கை

Get the Toppers Choice
BLACKBOOK VOCAB APP - Download Now
GET IT ON Google Play

**Q.38** கூற்று (A) மற்றும் காரணம் (R) என லேபிளிடப்பட்ட பின்வரும் இரண்டு கூற்றுகள் குறித்துச் சரியான விருப்பத்தைத் தேர்ந்தெடுக்கவும்.
கூற்று (A): இந்தியத் தேர்தல் ஆணையம் குறிப்பிட்ட அளவுகோல்களின் அடிப்படையில் அரசியல் கட்சிகளைத் தேசிய அல்லது மாநிலக் கட்சிகளாக அங்கீகரிக்கிறது.
காரணம் (R): அரசியல் கட்சிகளுக்கான அங்கீகாரம் என்பது அவற்றின் தேர்தல் செயல்பாடு மற்றும் இந்தியத் தேர்தல் ஆணையத்தால் வகுக்கப்பட்ட விதிகளுக்குக் கீழ்ப்படிந்து நடத்தல் ஆகியவற்றைப் பொறுத்தே அமைகிறது

**Ans**
- ✗ A. A தவறானது, R என்பது சரியானது
- ✗ B. A என்பது சரியானது, R என்பது தவறானது
- ✓ C. A மற்றும் R ஆகிய இரண்டும் சரியானவை, மற்றும் R என்பது A இன் சரியான விளக்கமாகும்
- ✗ D. A மற்றும் R ஆகிய இரண்டும் சரியானவை, ஆனால் R என்பது A இன் சரியான விளக்கம் அல்ல

**Q.39** ஒரு கடைக்காரர் ஒரு லேப்டாப்பை ₹40,000-க்கு வாங்குகிறார். அவர் முதலில் அதை 20% லாபத்திற்கு விற்கிறார். பின்னர், அதை வாங்கியவர் மற்றொரு நபருக்கு 10% நஷ்டத்திற்கு விற்கிறார் எனில், அந்த லேப்டாப்பின் இறுதி விற்பனை விலை என்ன?

**Ans**
- ✗ A. ₹48,000
- ✗ B. ₹50,000
- ✓ C. ₹43,200
- ✗ D. ₹42,000

**Q.40** A, B, C, D, S, T மற்றும் U ஆகிய ஒவ்வொருவரும் ஒரே ஆண்டில் ஜனவரி முதல் டிசம்பர் வரையிலான வெவ்வேறு மாதங்களில் அதாவது ஜனவரி, பிப்ரவரி, ஏப்ரல், மே, ஜூன், செப்டம்பர் மற்றும் டிசம்பர் ஆகிய மாதங்களில் பிறந்தனர். D ஜூன் மாதத்தில் பிறந்தார். S என்பவர் மட்டுமே B ஐ விட இளையவர். C என்பவர் T ஐ விட மூத்தவர், ஆனால் A ஐ விட இளையவர். U பிப்ரவரி மாதத்தில் பிறந்தார். B மற்றும் A க்கு இடையில் எத்தனை பேர் பிறந்தனர்?

**Ans**
- ✓ A. நான்கு
- ✗ B. மூன்று
- ✗ C. இரண்டு
- ✗ D. ஒன்று

**Q.41** மகாராஷ்டிராவில் உள்ள பின்வரும் தீவுகளில் எது, அதன் பழமையான குகைகள் மற்றும் 5-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சிற்பங்களுக்காக அறியப்படும் UNESCO இன் உலகப் பாரம்பரியத் தளமாகும்?

**Ans**
- ✓ A. எலிபெண்டா தீவு
- ✗ B. கசாப்பு தீவு (Butcher Island)
- ✗ C. சால்செட் தீவு
- ✗ D. கந்தேரி தீவு (Khanderi Island)

**Q.42** இந்தியப் பொருளாதாரக் கணக்கெடுப்பு (2002–03), 1991 சீர்திருத்தங்களுக்குப் பிந்தைய உலகமயமாக்கலின் தாக்கத்தைப் பற்றி விவாதிக்கிறது. ஒரு மாவட்டம் புதிய தொழில்களை ஈர்க்க முற்படும்போது, இந்தத் தாக்கத்தை எந்த உத்தி மிகச்சிறப்பாகப் பிரதிபலிக்கிறது?

**Ans**
- ✓ A. உள்நாட்டு – வெளிநாட்டு கூட்டு நிறுவனங்களை ஊக்குவித்தல்
- ✗ B. விவசாய மானியங்களை மேம்படுத்துதல்
- ✗ C. வெளிநாட்டு நிதி நிறுவனங்களைக் கட்டுப்படுத்துதல்
- ✗ D. தொழில்துறை உரிமங்களை விரிவாக்குதல்

Get the Toppers Choice
BLACKBOOK VOCAB APP - Download Now
GET IT ON Google Play

Q.43 பின்வரும் மும்மைகளில், ஒவ்வொரு எழுத்துக்களின் குழுவும் ஒரு குறிப்பிட்ட தர்க்கத்தைப் பின்பற்றி அடுத்த ஒன்றுடன் தொடர்புடையது. கொடுக்கப்பட்ட விருப்பங்களிலிருந்து, அதே தர்க்கத்தை பின்பற்றும் ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும்.

BARS - ARBS - SRAB
FLAM - LAFM - MALF

Ans
✔ A. KEAT - EAKT - TAEK
✘ B. BALK - ABLK - KALB
✘ C. WAST - WSAT - TSAW
✘ D. MIND - INMD - INDM

Q.44 வளமான சமவெளிகள், தொழில்மயமாக்கல் மற்றும் நகரமயமாக்கல் ஆகியவற்றின் காரணமாக உலகின் பின்வரும் எந்தப் பகுதி மிக அதிக மக்களடர்த்தியைக் கொண்டுள்ளது?

Ans
✘ A. கிரீன்லாந்து
✘ B. சஹாரா பாலைவனம்
✔ C. தெற்கு மற்றும் கிழக்கு ஆசியா
✘ D. அமேசான் வடிநிலம்

Q.45 அமிலக் கரைசல்களில் மின்னோட்டம் பாய்வதற்கான காரணம், ________ ஆகும்.

Ans
✘ A. உருவாகும் வாயுக்குமிழிகள்.
✔ B. கரைசலில் உள்ள அயனிகள்
✘ C. நடுநிலை மூலக்கூறுகள் மட்டுமே
✘ D. கரைசலில் உள்ள உலோகங்கள்

Q.46 கொடுக்கப்பட்ட தொடரில் '?'க்கு பதிலாக என்ன வர வேண்டும்?

39 52 65 78 91 ?

Ans
✘ A. 110
✘ B. 99
✔ C. 104
✘ D. 117

Q.47 'P' என்பது '×' ஐக் குறிக்கிறது, 'Q' என்பது '÷' ஐக் குறிக்கிறது, 'R' என்பது '-' ஐக் குறிக்கிறது, மற்றும் 'S' என்பது '+' ஐக் குறிக்கிறது எனில், பின்வரும் சமன்பாட்டில் கேள்விக்குறிக்கு (?) பதிலாக என்ன வரும்?

(42 Q 6) P 5 S 7 P 11 R (64 Q 8) P 2 R 5 P 6 = ?

Ans
✘ A. 42
✘ B. 62
✔ C. 66
✘ D. 54

Q.48 ΔABC இன் மற்ற இரு முனைகள் A (1, 5) மற்றும் B (4, 7) ஆகவும், அதன் நடுக்கோட்டு மையம் D (4, 5) ஆகவும் இருந்தால், C (x, y) என்ற முனையைக் கண்டறியவும்.

Ans
✘ A. C (3, 6)
✔ B. C (7, 3)
✘ C. C (7, 4)
✘ D. C (6, 3)

Blackbook

Get the Toppers Choice
BLACKBOOK VOCAB APP - Download Now
GET IT ON Google Play

**Q.49** 10 ஓம் மின்தடை கொண்ட ஒரு கம்பி இரண்டு சம துண்டுகளாக வெட்டப்படுகிறது. இந்த துண்டுகள் பக்க இணைப்பில் இணைக்கப்பட்டால், அதன் தொகுபயன் மின்தடை என்ன?

Ans
- ✗ A. 10 ஓம்
- ✗ B. 5 ஓம்
- ✗ C. 20 ஓம்
- ✓ D. 2.5 ஓம்

**Q.50** கீழே கொடுக்கப்பட்டுள்ள இரண்டு மும்மைகள் பின்பற்றும் அதே அமைப்பைப் பின்பற்றும் மும்மையைத் தேர்ந்தெடுக்கவும். இரண்டு மும்மைகளும் ஒரே மாதிரியான அமைப்பைப் பின்பற்றுகின்றன.

CF – GI – KL
MP - QS – UV

Ans
- ✗ A. BF – EI – HL
- ✗ B. RM – QT – PR
- ✗ C. PL – RN – TP
- ✓ D. OR – SU – WX

**Q.51** இந்தியாவை மாற்றுவதற்கான அணுசக்தியின் நிலையான பயன்பாடு மற்றும் மேம்பாட்டுச் சட்டம்,( Sustainable Harnessing and Advancement of Nuclear Energy for Transforming India Act,) 2025 -இன் கீழ் பின்வரும் எந்த வாரியம் நிறுவப்படும்?

Ans
- ✗ A. அணுசக்தி மேம்பாட்டு வாரியம் (Nuclear Power Development Board)
- ✓ B. அணுசக்தி ஒழுங்குமுறை வாரியம் (Atomic Energy Regulatory Board)
- ✗ C. தேசிய அணுசக்தி பாதுகாப்பு வாரியம் (National Nuclear Safety Board)
- ✗ D. மத்திய கதிர்வீச்சு கண்காணிப்பு வாரியம் (Central Radiation Monitoring Board)

**Q.52** புவியியல் கலைச்சொற்களில் அட்சரேகைகளும் தீர்க்கரேகைகளும் பொதுவாக எவ்வாறு குறிப்பிடப்படுகின்றன?

Ans
- ✓ A. புவியியல் ஆயத்தொலைவுகள்
- ✗ B. புவியியல் எல்லைகள்
- ✗ C. பூகோளப் பிரிவுகள்
- ✗ D. கோள் குறிகாட்டிகள்

**Q.53** அக்டோபர் 2025 இல் நாக்பூரில் நடைபெற்ற கோல் இந்தியா இன்டர்-கம்பெனி பவர்லிஃப்டிங், வெயிட்- லிஃப்டிங், மற்றும் பாடிபிள்டிங் சாம்பியன்ஷிப் 2025-26 இல், ஒட்டுமொத்த சாம்பியன்ஷிப் பட்டத்தை வென்ற அணி எது?

Ans
- ✗ A. SCCL
- ✗ B. SECL
- ✓ C. WCL
- ✗ D. MCL

**Q.54** Refer to the following letter, number, symbol series and answer the question. Counting to be done from left to right only. (All numbers are single-digit numbers only.)

(Left) S R E S 2 U ^ $ + X B 7 N M 7 4 C Z 5 @ U 4 D / (Right)

How many such numbers are there, each of which is immediately preceded by a letter and also immediately followed by a symbol?

Ans
- ✗ A. Two
- ✗ B. Three
- ✗ C. None
- ✓ D. One

Blackbook

Get the Toppers Choice
BLACKBOOK VOCAB APP - Download Now
GET IT ON Google Play

**Q.55** A என்பவர் ஒரு வேலையை 9 நாட்களிலும், B என்பவர் அதே வேலையை 22 நாட்களிலும் முடிப்பார். அவர்கள் இருவரும் சேர்ந்து 2 நாட்கள் வேலை செய்தால், மீதமுள்ள முடிக்கப்படாத வேலையின் பகுதி (fraction) என்ன?

**Ans**

✔ A. $\frac{68}{99}$

✘ B. $\frac{76}{99}$

✘ C. $\frac{71}{99}$

✘ D. $\frac{73}{99}$

**Q.56** இந்திய அரசியலமைப்பின் எந்த சட்டப்பிரிவு அரசானது ஒரு சமூக ஒழுங்கை பயனுற உறுதிசெய்து பாதுகாத்து மக்கள் நலப்பாட்டை வளர்த்திட அரிதில் முயலவேண்டும் என்று கூறுகிறது?

**Ans**

✔ A. சட்டப்பிரிவு 38

✘ B. சட்டப்பிரிவு 41

✘ C. சட்டப்பிரிவு 40

✘ D. சட்டப்பிரிவு 39

**Q.57** சிவம் ₹30,000 என்ற தொகையை ஒரு குறிப்பிட்ட தனிவட்டி விகிதத்தில் 3 ஆண்டுகளுக்குக் கடனாகப் பெற்றார். அக்காலகட்டத்தின் முடிவில் ஆண்டுக்கு x% என்ற தனி வட்டி விகிதத்தில் ₹4,500-என்ற தொகையை வட்டியாகச் செலுத்தியிருந்தால், x இன் மதிப்பைக் கண்டறியவும்.

**Ans**

✘ A. 7

✘ B. 4

✘ C. 6

✔ D. 5

**Q.58** A மற்றும் B ஒரு வேலையை 35 நாட்களில் முடிக்கிறார்கள். A தனியாக அந்த வேலையை 60 நாட்களில் செய்ய முடியும் என்றால், B தனியாக அதே வேலையின் மூன்றில் ஒரு பகுதியை __________ நாட்களில் செய்ய முடியும்.

**Ans**

✘ A. 42

✔ B. 28

✘ C. 36

✘ D. 84

Blackbook

Get the Toppers Choice
BLACKBOOK VOCAB APP - Download Now
GET IT ON Google Play

**Q.59** இந்த கேள்வியில் கேள்வியைத் தொடர்ந்து, (I) மற்றும் (II) என இரண்டு அறிக்கைகள் கொடுக்கப்பட்டுள்ளன. கேள்விக்கு பதிலளிக்க அறிக்கைகளில் கொடுக்கப்பட்டுள்ள தரவுகள் போதுமானதா என்பதை நீங்கள் தீர்மானிக்க வேண்டும். இரண்டு அறிக்கைகளையும் படித்து, பொருத்தமான பதிலைத் தீர்மானிக்கவும்.
"கௌரி, ராகினி, நவ்யா, காஜல் மற்றும் லவ்லி ஆகிய ஐந்து பெண்கள் ஒரு வட்ட மேசையைச் சுற்றி அதன் மையத்தை நோக்கியவாறு அமர்ந்துள்ளனர். லவ்லியின் உடனடி இடதுபுறத்தில் அமர்ந்திருப்பவர் யார்?

கூற்று I: கௌரி என்பவர் லவ்லியின் உடனடி வலதுபுறத்தில் அமர்ந்துள்ளார். ராகினி என்பவர் காஜலின் உடனடி இடதுபுறத்தில் அமர்ந்துள்ளார்.
கூற்று II: நவ்யா என்பவர் காஜலின் இடதுபுறத்தில் இரண்டாவதாக அமர்ந்துள்ளார். கௌரி என்பவர் நவ்யா மற்றும் லவ்லி ஆகிய இருவரின் உடனடி அருகாமையாளர் ஆவார்.

**Ans**
- ✗ A. கேள்விக்குப் பதிலளிக்க அறிக்கைகள் I மற்றும் II ஆகிய இரண்டுமே போதுமானவை அல்ல
- ✗ B. கேள்விக்குப் பதிலளிக்க அறிக்கைகள் I மற்றும் II ஆகிய இரண்டும் சேர்ந்தே போதுமானவை (அறிக்கை I தனியாகவோ அல்லது அறிக்கை II தனியாகவோ போதுமானதல்ல)
- ✓ C. அறிக்கை II-ல் உள்ள தரவு மட்டுமே கேள்விக்குப் பதிலளிக்க போதுமானது, ஆனால் அறிக்கை I-ல் உள்ள தரவு போதுமானதல்ல
- ✗ D. அறிக்கை I-ல் உள்ள தரவு மட்டுமே கேள்விக்குப் பதிலளிக்க போதுமானது, ஆனால் அறிக்கை II-ல் உள்ள தரவு போதுமானதல்ல

**Q.60** A, B, C, M, N மற்றும் O ஆகிய ஒவ்வொருவரும் வெவ்வேறு மதிப்பெண்களைப் பெற்றுள்ளனர். B-ஐ விடக் குறைவான மதிப்பெண்களை இரண்டு நபர்கள் மட்டுமே பெற்றுள்ளனர். C என்பவர் M-ஐ விட உடனடி அதிக மதிப்பெண் பெற்றார். M மற்றும் O ஆகிய இருவருக்கும் இடையே இரண்டு நபர்கள் மட்டுமே மதிப்பெண்களைப் பெற்றுள்ளனர். A என்பவர் N-ஐ விட அதிக மதிப்பெண் பெற்றுள்ளார். O-ஐ விடக் குறைவான மதிப்பெண்ணை ஒருவரும் பெறவில்லை. N-ஐ விட அதிக மதிப்பெண் பெற்ற நபர்கள் எத்தனை பேர்?

**Ans**
- ✗ A. மூன்று
- ✗ B. இரண்டு
- ✗ C. ஒன்று
- ✓ D. நான்கு

**Q.61** L என்பவர் M இன் தாய் ஆவார். M என்பவர் O இன் தாய் ஆவார். O என்பவர் H இன் சகோதரி ஆவார். H என்பவர் P இன் மனைவி ஆவார். P என்பவர் F இன் தந்தை ஆவார். F என்பவர் G இன் தாய் ஆவார். M என்பவர் F க்கு என்ன உறவு?

**Ans**
- ✓ A. தாயின் தாய்
- ✗ B. தந்தையின் சகோதரி
- ✗ C. சகோதரியின் மகள்
- ✗ D. தாயின் சகோதரி

**Q.62** ₹3059 என்ற தொகையானது மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்படுகிறது; அதாவது இதில் முதல் பகுதியின் பாதி, இரண்டாவது பகுதியின் நான்கில் ஒரு பங்கு மற்றும் மூன்றாவது பகுதியின் எட்டில் ஒரு பங்கு ஆகியவை சமமாக உள்ளன. மூன்றாவது பகுதியின் மதிப்பைக் (₹-இல்) கண்டறியவும் .

**Ans**
- ✗ A. 1948
- ✓ B. 1748
- ✗ C. 1548
- ✗ D. 1848

Get the Toppers Choice
BLACKBOOK VOCAB APP - Download Now

**Q.63** கீழே எண்களின் இரண்டு தொகுப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. எண்களின் ஒவ்வொரு தொகுப்பிலும், முதல் எண்ணில் ஒரு குறிப்பிட்ட கணித செயல்பாடு செய்யப்படுவதன் மூலம் இரண்டாவது எண் ஆனது பெறப்படுகின்றது. இதேபோல், இரண்டாவது எண்ணில் ஒரு குறிப்பிட்ட கணித செயல்பாடு செய்யப்படுவதன் மூலம் மூன்றாவது எண் ஆனது பெறப்படுகின்றது. கொடுக்கப்பட்ட விருப்பங்களில் எது கேள்வியில் உள்ள அதே செயல்பாடுகளின் தொகுப்பைப் பின்பற்றுகிறது?
(குறிப்பு: எண்களை அதன் கூறு (constituent) இலக்கங்களாகப் பிரிக்காமல், முழு எண்களில் செயல்பாடுகள் செய்யப்பட வேண்டும். எ.கா. 13. 13 -இல் கூட்டல் / கழித்தல் / பெருக்கல் போன்ற செயல்பாடுகளைச் செய்யலாம். 13 ஐ 1 மற்றும் 3 ஆக பிரித்த பின்னர் 1 மற்றும் 3 இல் கணித செயல்பாடுகளைச் செய்வது அனுமதிக்கப்படாது)
5 – 5 – 25 - 125;
4 – 4 – 16 – 64

Ans
- ✗ A. 7 – 7 – 49 – 94
- ✗ B. 8 – 8 – 64 – 520
- ✓ C. 6 – 6 – 36 – 216
- ✗ D. 3 – 3 – 9 – 36

**Q.64** Which quantity describes the rate at which work is done over a period of time?

Ans
- ✗ A. Displacement
- ✓ B. Power
- ✗ C. Force
- ✗ D. Energy

**Q.65** பின்வரும் அடிப்படை உரிமைகளில் எது குடிமக்களுக்கு மட்டுமே கிடைக்கக்கூடியது மற்றும் வெளிநாட்டினருக்குக் கிடைக்காதது எது?

Ans
- ✗ A. சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற உரிமை
- ✗ B. உயிருக்கும் உடல்சார் உரிமைக்கும் பாதுகாப்பு
- ✗ C. சுரண்டலுக்கு எதிரான உரிமை
- ✓ D. பேச்சு சிந்தனை வெளிப்படுகைக்கான ஆகியவற்றுக்கான உரிமை

**Q.66** ஜூன் 2025 இல், இந்தியாவின் வெளிநாட்டு உளவு அமைப்பான ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வு பிரிவின் (Research and Analysis Wing - RAW) செயலாளராக பின்வருவனவற்றில் யார் நியமிக்கப்பட்டார்?

Ans
- ✗ A. ரவி சின்ஹா
- ✓ B. பராக் ஜெயின்
- ✗ C. அரவிந்த் குமார்
- ✗ D. சமந்த் கோயல்

**Q.67** ஒரு எண்ணின் 40% ஐ 240-உடன் கூட்டினால், அதே எண் விடையாகக் கிடைக்கிறது எனில் . அந்த எண்ணின் 50% என்பது ____ ஆகும்.

Ans
- ✗ A. 220
- ✓ B. 200
- ✗ C. 440
- ✗ D. 300

**Q.68** எந்த வகையான மண், அதிக ஈரப்பதத்தைத் தக்கவைக்கும் திறன் காரணமாக, இந்தியாவில் பாரம்பரியமாக பருத்தி சாகுபடிக்கு மிகவும் உகந்ததாக கருதப்படுகிறது?

Ans
- ✗ A. அதிக மழைப்பொழிவு உள்ள பகுதிகளில் காணப்படும் சரளைமண்
- ✓ B. களிமண் மற்றும் ஈரப்பதத்தை அதிகமாகக் கொண்டுள்ள கரிசல் மண்
- ✗ C. இமயமலை ஆறுகளால் படியவைக்கப்பட்ட வண்டல் மண்
- ✗ D. வறண்ட மேற்குப் பகுதிகளில் காணப்படும் பாலைவன மண்

Blackbook

Get the Toppers Choice
BLACKBOOK VOCAB APP - Download Now
GET IT ON Google Play

**Q.69** கொடுக்கப்பட்ட தொடரை தர்க்கரீதியாக முழுமையாக்க பின்வரும் எழுத்து-எண் தொகுப்புகளில் எது கேள்விக்குறிக்கு (?) பதிலாக வரும்?

LTP25 MUQ36 NVR47 OWS58 ?

**Ans**
- ✗ A. PXU68
- ✗ B. PXU69
- ✗ C. PXT68
- ✓ D. PXT69

**Q.70** அமித் தரையில் நின்று, 100 m நீளமுள்ள நூலைப் பயன்படுத்தி 30° ஏற்றக் கோணத்தில் ஒரு காற்றாடியை விடுகிறான். நிதின் 10 m உயரமுள்ள ஒரு கட்டிடத்தின் கூரையில் நின்று, 45° ஏற்றக் கோணத்தில் தனது காற்றாடியை விடுகிறான். காற்றாடிகள் சந்திக்கும் புள்ளியின் எதிர் எதிர் பக்கங்களில் இரு சிறுவர்கள் நின்று கொண்டிருக்கிறார்கள். இரு காற்றாடிகளும் ஒரே புள்ளியில் சந்திக்குமாறு நிதின் பயன்படுத்த வேண்டிய நூலின் நீளத்தைக் (m இல்) கண்டறியவும்.

**Ans**
- ✗ A. $50\sqrt{3}$
- ✓ B. $40\sqrt{2}$
- ✗ C. $40\sqrt{3}$
- ✗ D. $50\sqrt{2}$

**Q.71** கலப்பு முடிவுறா சுழல் எண்களைக் கொண்ட பின்வரும் சமன்பாட்டில் x இன் மதிப்பைக் கண்டறிந்து, அதன் தீர்வை ஒரு பொதுப் பின்னமாக (vulgar fraction) தரவும்.
3x + 2.3666... = 5.4666...

**Ans**
- ✗ A. $\frac{31}{26}$
- ✗ B. $\frac{29}{31}$
- ✗ C. $\frac{31}{20}$
- ✓ D. $\frac{31}{30}$

**Q.72** A, B, C, D, E, F, G மற்றும் H ஆகியோர் ஒரு சதுர மேசையைச் சுற்றி மையத்தை நோக்கி அமர்ந்துள்ளனர். அவர்களில் சிலர் மூலைகளிலும், சிலர் மிகச்சரியாக பக்கங்களின் மையத்திலும் அமர்ந்துள்ளனர்.
B என்பவர் H இன் வலதுபுறத்தில் இரண்டாவதாக அமர்ந்துள்ளார். B எந்தவொரு பக்கத்தின் மையத்திலும் அமரவில்லை. F என்பவர் E மற்றும் B இன் உடனடி அருகாமையாளர் ஆவார். D என்பவர் H இன் இடதுபுறத்தில் மூன்றாவதாக அமர்ந்துள்ளார். G என்பவர் ஒரு மூலையில் அமர்ந்துள்ளார். C என்பவர் A இன் வலதுபுறத்தில் இரண்டாவதாக அமர்ந்துள்ளார்.
D இன் இடதுபுறத்தில் இருந்து எண்ணும்போது D மற்றும் A க்கு இடையே எத்தனை நபர்கள் அமர்ந்துள்ளனர்?

**Ans**
- ✗ A. ஒன்று
- ✗ B. மூன்று
- ✗ C. நான்கு
- ✓ D. ஐந்து

**Q.73** கீழே உள்ள விருப்பங்களில் எது $27x^3 + 343y^3 + 189x^2y + 441xy^2$ க்குச் சமமானது?

**Ans**
- ✗ A. $(3x + 10y)^3$
- ✗ B. $(5x + 7y)^3$
- ✓ C. $(3x + 7y)^3$
- ✗ D. $(7x + 3y)^3$

Get the Toppers Choice
BLACKBOOK VOCAB APP - Download Now
GET IT ON Google Play

**Q.74** செப்டம்பர் 22, 2025 அன்று பாரிஸில் நடைபெற்ற விழாவில், 2025 பலோன் d'Or (ஆடவர்) விருதை வென்ற வீரர் யார்?

**Ans**
- ✗ A. ஜூட் பெல்லிங்ஹாம்
- ✗ B. எர்லிங் ஹாலண்ட்
- ✗ C. கைலியன் ம்பாப்பே (Kylian Mbappé)
- ✓ D. உஸ்மான் டெம்பலே (Ousmane Dembélé)

**Q.75** சோழர்கள் ஆட்சி காலத்தில் இருந்த உள்ளாட்சி அமைப்பு முறை பற்றிய தகவல்கள் ______ சிறப்பாக காணப்படுகின்றது.

**Ans**
- ✓ A. உத்தரமேரூர் கல்வெட்டு
- ✗ B. ஹதிகும்பா கல்வெட்டு
- ✗ C. ஐஹோல் கல்வெட்டு
- ✗ D. அலகாபாத் தூண் கல்வெட்டு

**Q.76** 'A' என்பது '÷' என்றும், 'B' என்பது '×' என்றும், 'C' என்பது '+' என்றும் மற்றும் 'D' என்பது '−' என்றும் குறிக்கப்பட்டால், பின்வரும் சமன்பாட்டில் கேள்விக்குறி '?' உள்ள இடத்தில் என்ன மதிப்பு வரும்?

24 C 16 D 8 A 4 B 2 = ?

**Ans**
- ✗ A. 32
- ✗ B. 40
- ✓ C. 36
- ✗ D. 28

**Q.77** ஒரு குறிப்பிட்ட குறியீட்டில்,
'wishing everyone well' என்பது 'lh cv vd' என குறியிடப்பட்டுள்ளது.
'wishing happy days' என்பது 'fv fz lh' என குறியிடப்பட்டுள்ளது.
'days everyone enjoy' என்பது 'cv vm fz' என குறியிடப்பட்டுள்ளது.
(அனைத்து குறியீடுகளும் இரண்டு எழுத்து குறியீடுகள் மட்டுமே.)

'happy everyone' என்பதற்கான சாத்தியமான குறியீடு என்ன?

**Ans**
- ✗ A. cv fz
- ✗ B. fV lh
- ✓ C. fv cv
- ✗ D. vd fz

**Q.78** $10\sin A + \cos A = \sqrt{6}\sin A$ எனில், $\tan A$ இன் மதிப்பைக் கண்டறியவும் .

**Ans**
- ✓ A. $\frac{-10-\sqrt{6}}{94}$
- ✗ B. $\frac{-10-\sqrt{6}}{96}$
- ✗ C. $\frac{-10-\sqrt{6}}{99}$
- ✗ D. $\frac{-11-\sqrt{6}}{96}$

**Q.79** மார்ச் 2026 இல் அயல் படர் உயிரினங்கள் (Invasive Alien Species) குறித்த குழுவை எந்த அமைப்பு நிறுவியது?

**Ans**
- ✗ A. இந்திய வன ஆராய்ச்சி கவுன்சில்
- ✓ B. தேசிய பல்லுயிர் ஆணையம்
- ✗ C. மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியம்
- ✗ D. சுற்றுச்சூழல் அமைச்சகம்

Blackbook

Get the Toppers Choice
BLACKBOOK VOCAB APP - Download Now
GET IT ON Google Play

Q.80 பின்வருபவர்களில் யார் 1885 இல் இந்திய தேசிய காங்கிரஸை நிறுவிய பெருமைக்குரியவர் ஆவார்?

Ans
- ✗ A. ரிப்பன் பிரபு
- ✗ B. கர்சன் பிரபு
- ✓ C. ஆலன் ஆக்டேவியன் ஹியூம்
- ✗ D. டஃபெரின் பிரபு

Q.81 P, Q, S, T, Y மற்றும் Z ஆகியோர் வெவ்வேறு மதிப்பெண்களைப் பெற்றனர். Y-ஐ விட அதிக மதிப்பெண் பெற்றவர்கள் இருவர் மட்டுமே. S மட்டுமே P-ஐ விடக் குறைவான மதிப்பெண் பெற்றவர் . T என்பவர் Q-ஐ விட அதிக மதிப்பெண்ணும், Z-ஐ விடக் குறைவான மதிப்பெண்ணும் பெற்றுள்ளார். T-ஐ விட அதிக மதிப்பெண் பெற்றவர்கள் எத்தனை பேர்?

Ans
- ✗ A. நான்கு
- ✗ B. இரண்டு
- ✗ C. மூன்று
- ✓ D. ஒன்று

Q.82 காற்று அல்லது மண்ணில் உள்ள கார்பன் டை ஆக்சைடு, நீருடன் இணைந்து நிகழும் வேதி வானிலைச் சிதைவுறுதல் (chemical weathering) செயல்முறை பின்வரும் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

Ans
- ✗ A. கார்போலேஷன்
- ✓ B. கார்போனேசன்
- ✗ C. கார்புரேஷன்
- ✗ D. கார்பாக்சிலேஷன்

Q.83 பின்வரும் சமன்பாட்டில் '+' மற்றும் '–' ஆகியவை ஒன்றுக்கொன்று பரிமாற்றப்பட்டு மற்றும் '×' மற்றும் '÷' ஆகியவை ஒன்றுக்கொன்று பரிமாற்றப்படுகிறது எனில், கேள்விக்குறிக்கு (?) பதிலாக என்ன வரும்?

35 + 10 × 2 – 15 ÷ 3 = ?

Ans
- ✗ A. 76
- ✗ B. 74
- ✓ C. 75
- ✗ D. 77

Q.84 ஒரு மாணவர் ஒரு சேர்மத்தை வெப்பப்படுத்தும்போது, பழுப்பு நிறப் புகை வெளியேறுவதைக் கவனிக்கிறார். எனில், அந்தச் சேர்மமானது பெரும்பாலும் ______ஆக இருந்திருக்கலாம்.

Ans
- ✗ A. AgCl
- ✗ B. NaCl
- ✓ C. $Pb(NO_3)_2$
- ✗ D. $CaCO_3$

Q.85 சீக்ரெட் மவுண்டன் (Secret Mountain) எனும் மெட்டா-ஹியூமன் டிஜிட்டல் இசைக்குழு யாரால் உருவாக்கப்பட்டது?

Ans
- ✗ A. அரிஜித் சிங்
- ✗ B. ஸ்ரேயா கோஷல்
- ✓ C. A.R. ரஹ்மான்
- ✗ D. சங்கர் மகாதேவன்

Blackbook

Get the Toppers Choice
BLACKBOOK VOCAB APP - Download Now
GET IT ON Google Play

**Q.86** ஒரு விஞ்ஞானி, உருளைக்கிழங்கின் (potato tuber) சேமிப்புத் திசுவில் பல நிறமற்ற கணிகங்களைக் கொண்ட ஒரு தாவரச் செல்லைக் கவனிக்கிறார். இந்த கணிகங்களுடன் எந்த செயல்பாடு பெரும்பாலும் தொடர்புடையதாக உள்ளது?

**Ans**
- ✗ A. ஆற்றலை உற்பத்தி செய்ய சூரிய ஒளியை சேமித்தல்
- ✗ B. சிகப்பு மற்றும் மஞ்சள் நிறமிகளைத் தொகுத்தல்
- ✓ C. ஒளிச்சேர்க்கை மூலம் உற்பத்தி செய்யப்படும் ஸ்டார்ச்சை சேமித்தல்
- ✗ D. புரதத் தொகுப்பிற்கான அமினோ அமிலங்களை உற்பத்தி செய்தல்

**Q.87** பின்வரும் சமன்பாட்டில் '+' மற்றும் '–' ஆகியவை ஒன்றுக்கொன்று பரிமாற்றப்பட்டு, மற்றும் 'x' மற்றும் '÷' ஆகியவை ஒன்றுக்கொன்று பரிமாற்றப்படுகிறது எனில், '?' க்கு பதிலாக என்ன வரும்?

81 x 9 – 14 ÷ 2 + (60 x 6) ÷ 3 – 49 + 15 = ?

**Ans**
- ✓ A. 41
- ✗ B. 64
- ✗ C. 56
- ✗ D. 32

**Q.88** இந்திய அரசியலமைப்பின் 75(3)வது சட்டப்பிரிவின் கீழ், எந்த அமைப்பு மக்களவைக்கு (லோக்சபா) கூட்டாகப் பொறுப்புடையது?

**Ans**
- ✓ A. அமைச்சரவை (Council of Ministers)
- ✗ B. இந்திய நிதி ஆணையம்( Finance Commission of India)
- ✗ C. இந்திய உச்ச நீதிமன்றம்
- ✗ D. மாநிலங்களவை

**Q.89** ஒரு குறிப்பிட்ட தர்க்கத்தைப் பின்பற்றி, 9 என்பது 117 உடன் தொடர்புடையது. அதே தர்க்கத்தைப் பின்பற்றி, 12 என்பது 156 உடன் தொடர்புடையது. அதே தர்க்கத்தை பின்பற்றி, பின்வருவனவற்றில் என்பது 17 எதனுடன் தொடர்புடையது?
(குறிப்பு: எண்களை அதன் கூறு இலக்கங்களாகப் (constituent digits) பிரிக்காமல், முழு எண்களில் செயல்பாடுகள் செய்யப்பட வேண்டும். எ. கா. 13 – 13 இல் கூட்டல்/கழித்தல்/பெருக்குதல் போன்ற செயல்பாடுகளைச் செய்யலாம். 13 ஐ 1 மற்றும் 3 ஆக பிரித்த பின்னர் 1 மற்றும் 3 இல் கணித செயல்பாடுகளைச் செய்வது அனுமதிக்கப்படாது.)

**Ans**
- ✗ A. 201
- ✓ B. 221
- ✗ C. 197
- ✗ D. 186

**Q.90** ஒரு மொத்த வியாபாரி, ஒரு வாடிக்கையாளர் ஒரு பொருளின் 100 அலகுகளுக்கு மேல் வாங்கினால், அவரின் மொத்தக் கொள்முதல் மீது 2% திட்டத் தள்ளுபடி வழங்கும் ஒரு திட்டத்தை அறிவிக்கிறார். ஓரலகு விலை ₹20 எனில், அந்த வாடிக்கையாளர் 150 அலகுகளை வாங்கும்போது அவர் செலுத்த வேண்டிய மொத்தத் தொகை எவ்வளவு?

**Ans**
- ✓ A. ₹2,940
- ✗ B. ₹3,020
- ✗ C. ₹3,000
- ✗ D. ₹2,980

Get the Toppers Choice
BLACKBOOK VOCAB APP - Download Now
GET IT ON Google Play

**Q.91** இந்திய அரசியலமைப்பின் எந்த சட்டப்பிரிவு, ஊர் நிலையிலும்,இடைப்பட்ட மற்றும் மாவட்ட நிலைகளிலும் ஊராட்சிகள் அமைப்பதற்கான ஏற்பாட்டை பற்றி சிறப்பாகக் குறிப்பிடுகிறது?

**Ans**
- ✗ A. சட்டப்பிரிவு 243A
- ✓ B. சட்டப்பிரிவு 243B
- ✗ C. சட்டப்பிரிவு 243D
- ✗ D. சட்டப்பிரிவு 243H

**Q.92** 8, 7 மற்றும் 11 ஆகிய எண்களால் வகுக்கும்போது ஒவ்வொரு முறையும் 4-ஐ மீதியாகத் தரும் மிகப்பெரிய நான்கு இலக்க எண் ____ ஆகும்.

**Ans**
- ✗ A. 9956
- ✗ B. 9811
- ✗ C. 9624
- ✓ D. 9860

**Q.93** ஒரு செவ்வக வடிவ வயலானது 68.5 m/45.6 m அளவுகளைக் கொண்டுள்ளது. அந்த வயலின் வெளிப்புறத்தைச் சுற்றி 2.4 m சீரான அகலமுள்ள ஒரு பாதை அமைக்கப்பட்டுள்ளது எனில், பாதையின் வெளிச் சுற்றளவுக்கும் அசல் வயலின் சுற்றளவுக்கும் இடையே உள்ள வித்தியாசத்தைக் கண்டறியவும்.

**Ans**
- ✗ A. 17 m
- ✓ B. 19.2 m
- ✗ C. 18.5 m
- ✗ D. 20 m

**Q.94** இந்தியாவிலுள்ள பின்வரும் காப்பகங்களில் எது ஒற்றைக் கொம்பு காண்டாமிருகங்களின் வெற்றிகரமான பாதுகாப்பிற்குப் புகழ்பெற்றது?

**Ans**
- ✗ A. பெரியார் வனவிலங்கு சரணாலயம்
- ✗ B. கிர் தேசிய பூங்கா
- ✓ C. காசிரங்கா தேசிய பூங்கா
- ✗ D. சைலண்ட் வேலி தேசிய பூங்கா

**Q.95** இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தின் போது ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்துறை கொள்கை தீர்மானம் (1956), பின்வருவனவற்றில் எதை நோக்கமாகக் கொண்டிருந்தது?

**Ans**
- ✓ A. சமூகத்தின் ஒரு சோசலிச அமைப்பை நிறுவுதல்
- ✗ B. கனரகத் தொழில்களின் தனியார்மயமாக்கல்
- ✗ C. பொதுத்துறை ஈடுபாட்டைக் குறைத்தல்
- ✗ D. நுகர்வோர் பொருட்களின் தொழில்களை மட்டுமே ஊக்குவித்தல்

**Q.96** ஆங்கில அகரவரிசையின் அடிப்படையில் CM24 என்பது ஒரு குறிப்பிட்ட வழிமுறையில் HR26 உடன் தொடர்புடையது. அதே வழிமுறையில், AT15 என்பது FY17 உடன் தொடர்புடையது. அதே தர்க்கத்தைப் பின்பற்றி, CR12 என்பது கொடுக்கப்பட்ட விருப்பங்களில் எதனுடன் தொடர்புடையதாகும்?

**Ans**
- ✓ A. HW14
- ✗ B. HV14
- ✗ C. IV14
- ✗ D. IW14

Get the Toppers Choice
BLACKBOOK VOCAB APP - Download Now
GET IT ON Google Play

**Q.97** ஒரு கேள்வி ஆனது கொடுக்கப்பட்டுள்ளது, அதைத் தொடர்ந்து I மற்றும் II என்று குறியிடப்பட்ட இரண்டு கூற்றுகள் கொடுக்கப்பட்டுள்ளன, கேள்விக்கு பதிலளிக்க எந்த கூற்று/கள் போதுமானது என்பதை அடையாளம் காணவும்.

H, I, J, K, மற்றும் L ஆகியோரில் மிக உயரமானவர் யார்?

(I) J என்பவர் H மற்றும் I ஐ விட உயரமானவர், ஆனால் K ஐ விட உயரம் குறைவானவர்.
(II) L என்பவர் K ஐ விட உயரம் குறைவானவர், ஆனால் J ஐ விட உயரமானவர்.

**Ans**
✗ A. கூற்று II இல் உள்ள தரவு மட்டுமே கேள்விக்கு பதிலளிக்க போதுமானது, அதே நேரத்தில் கூற்று I இல் உள்ள தரவு போதுமானதாக இல்லை
✗ B. கூற்றுகள் I மற்றும் II ஆகியவை சேர்ந்து கேள்விக்கு பதிலளிக்கப் போதுமானதாக இல்லை
✓ C. கூற்றுகள் I மற்றும் II ஆகியவை சேர்ந்து (கூற்று I மட்டும் அல்லது கூற்று II மட்டும் அல்ல) கேள்விக்கு பதிலளிக்க போதுமானது
✗ D. கூற்று I இல் உள்ள தரவு மட்டுமே கேள்விக்கு பதிலளிக்க போதுமானது, அதே நேரத்தில் கூற்று II இல் உள்ள தரவு போதுமானதாக இல்லை

**Q.98** அணுவின் குறியீட்டில், Z என்னும் குறியீடானது ______ஐக் குறிக்கிறது.

**Ans**
✓ A. அணு எண்ணைக்
✗ B. மின்னூட்டத்தைக்
✗ C. நிறை எண்ணைக்
✗ D. நியூட்ரான் எண்ணைக்

**Q.99** (x + 3) மற்றும் (x−3) க்கு இடையிலான சராசரி விகிதம் 4 ஆக உள்ளது எனில், x இன் மதிப்பு என்ன? (x > 0)

**Ans**
✗ A. 6
✗ B. 4
✗ C. 3
✓ D. 5

**Q.100** எந்த நடன வடிவம் முன்னதாக 'யக்ஷகானம்' என்ற பொதுவான பெயரால் அழைக்கப்பட்டது?

**Ans**
✗ A. கதக்
✗ B. மோகினியாட்டம்
✗ C. பரதநாட்டியம்
✓ D. குச்சிப்புடி

**Q.101** பின்வரும் எந்த சிந்து சமவெளி நாகரிக தளத்தில் ஒரு கப்பல் கட்டும் தளமானது (dockyard) கண்டுபிடிக்கப்பட்டது?

**Ans**
✗ A. மொஹென்ஜோ-தாரோ
✓ B. லோத்தல்
✗ C. ஹரப்பா
✗ D. காளிபங்கன்

**Q.102** மறுமலர்ச்சிக் கலைச் சேகரிப்பு மற்றும் புதுச்செவ்வியல் (neoclassical) கட்டிடக்கலைக்கு பெயர்பெற்ற கொல்கத்தாவின் பளிங்கு அரண்மனையைக் கட்டியவர் யார்?

**Ans**
✓ A. ராஜா ராஜேந்திர முல்லிக்
✗ B. பங்கிம் சந்திர சாட்டர்ஜி
✗ C. கேசப் சந்திர சென்
✗ D. தாதாபாய் நவ்ரோஜி

Get the Toppers Choice
BLACKBOOK VOCAB APP - Download Now
GET IT ON Google Play

Q.103 இந்தக் கேள்வி பின்வரும் வார்த்தைகளை அடிப்படையாகக் கொண்டது.

(இடது) TON TAR DEV TAB (வலது)

ஆங்கில அகரவரிசைப்படி, வலதுபுறமிருந்து இரண்டாவது வார்த்தையின் இரண்டாவது எழுத்திற்கும் இடதுபுறமிருந்து முதல் வார்த்தையின் இரண்டாவது எழுத்திற்கும் இடையே எத்தனை எழுத்துகள் உள்ளன?

Ans
- ✗ A. 8
- ✗ B. 7
- ✓ C. 9
- ✗ D. 6

Q.104 Find the mean deviation about the mean for the data.

5, 10, 15, 20, 25.

Ans
- ✗ A. 7
- ✗ B. 5
- ✓ C. 6
- ✗ D. 8

Q.105 கொடுக்கப்பட்ட தொடரில் கேள்விக்குறிக்கு (?) பதிலாக என்ன வர வேண்டும்?

111, 223, 449, 903, 1813, ?

Ans
- ✗ A. 3536
- ✓ B. 3635
- ✗ C. 3630
- ✗ D. 3036

Q.106 ஆங்கில அகரவரிசையின் அடிப்படையில், பின்வரும் நான்கு எழுத்து-தொகுப்பு ஜோடிகளில் மூன்று ஒரு குறிப்பிட்ட வழிமுறையில் ஒரே போல உள்ளது, இதனால் ஒரு குழுவை உருவாக்குகிறது. எந்த எழுத்து தொகுப்பு ஜோடி அந்த குழுவில் சேராதது ஆகும்?
(குறிப்பு: மாறுபட்ட ஒன்றானது எழுத்து-தொகுப்பில் உள்ள மெய்யெழுத்துக்கள்/உயிரெழுத்துகளின் எண்ணிக்கை அல்லது அவற்றின் நிலை ஆகியவற்றின் அடிப்படையில் இல்லை.)

Ans
- ✓ A. OSV
- ✗ B. JOR
- ✗ C. DIL
- ✗ D. HMP

Q.107 Which application software allows users to immediately see the result of a change in data?

Ans
- ✗ A. Word processor
- ✗ B. Presentation tool
- ✓ C. Spreadsheet
- ✗ D. Database software

Q.108 ஓர் இணைகரத்தின் அடிப்பக்கம் அதன் உயரத்தைப் போல மூன்று மடங்கு ஆகும். அவ்விணைகரத்தின் பரப்பளவு 216 $cm^2$ எனில், அதன் உயரத்தைக் கண்டறியவும்.

Ans
- ✓ A. $6\sqrt{2}$ cm
- ✗ B. $5\sqrt{2}$ cm
- ✗ C. $7\sqrt{2}$ cm
- ✗ D. $8\sqrt{2}$ cm

Blackbook

Get the Toppers Choice
BLACKBOOK VOCAB APP - Download Now
GET IT ON Google Play

Q.109 $\Delta$ XYZ இல், ∠X இன் கோண இருசமவெட்டி XT ஆனது பக்கம் YZ ஐ T இல் சந்திக்கிறது. XY = 5.6 cm , YZ = 6 cm மற்றும் YT = 3.2 cm எனில், XZ இன் மதிப்பைக் கண்டறியவும்.

Ans
- ✗ A. 4.2 cm
- ✓ B. 4.9 cm
- ✗ C. 6 cm
- ✗ D. 5.4 cm


Q.110 ஒரு லென்ஸுக்கு முன்பாக 10 cm தொலைவில் பொருள் ஒன்று வைக்கப்பட்டுள்ளது. அதன் பிம்பம் பொருளின் அதே பக்கத்தில் 30 cm தொலைவில் உருவாகிறது எனில், அந்த லென்ஸ் ஏற்படுத்தும் உருப்பெருக்கம் எவ்வளவு?

Ans
- ✗ A. -0.3
- ✗ B. 0.3
- ✗ C. -3
- ✓ D. 3

Q.111 ஓர் நபர் P என்ற இடத்திலிருந்து Q என்ற இடத்திற்குச் சென்று ஒரு பொருளை வாங்குவதற்காகப் பயணம் செய்கிறார்; அப்பொருளின் விலை P ஐ விட Q இல் 15% குறைவாக உள்ளது. அவர் பயணத்திற்காக ₹150 செலவிடுகிறார்; ஆனாலும், P இல் அப்பொருளை வாங்குவதோடு ஒப்பிடுகையில் அவருக்கு ₹150 மிச்சமாகிறது. P இல் உள்ள விலையுடன் ஒப்பிடுகையில் அவரது சேமிப்பு சதவீதம் என்ன?

Ans
- ✗ A. 9%
- ✓ B. 7.5%
- ✗ C. 4.5%
- ✗ D. 3.5%

Q.112 கொடுக்கப்பட்ட படத்தில், AB ஆனது CD க்கு இணையாக உள்ளது மற்றும் RS ஒரு குறுக்குவெட்டி ஆகும். X இன் மதிப்பைக் கண்டறியவும்.




Ans
- ✗ A. 45
- ✗ B. 35
- ✓ C. 55
- ✗ D. 65

Q.113 "தி கைடு" (The Guide) என்ற புகழ்பெற்ற நாவலை எழுதிய இந்திய எழுத்தாளர் யார்?

Ans
- ✗ A. குஷ்வந்த் சிங்
- ✗ B. விக்ரம் சேத்
- ✗ C. ராஜா ராவ்
- ✓ D. R.K. நாராயண்

Get the Toppers Choice
BLACKBOOK VOCAB APP - Download Now
GET IT ON Google Play

**Q.114** உங்களிடம் ஒரு பெரிய டாடாசெட் உள்ளது, அதை வெவ்வேறு நெடுவரிசைகளின் அடிப்படையில் அடிக்கடி சார்ட் (Sort) செய்ய வேண்டும். "Sort" என்ற டயலொக்பாக்சை மீண்டும் மீண்டும் திறக்காமல், வெவ்வேறு வரிசைப்படுத்தல் அளவுகோல்களை (sorting criteria) விரைவாக அணுகவும் மற்றும் பயன்படுத்தவும் உதவும் ஒரு திறமையான வழி எது?

Ans
- ✗ A. நீங்கள் சார்ட் (Sort) செய்ய விரும்பும் ஒவ்வொரு நெடுவரிசைக்கும் ஸ்லைஸ்களை உருவாக்கவும்
- ✗ B. "Sort" கட்டளையை Quick Access Toolbar இல் சேர்க்கவும் மற்றும் ஒவ்வொரு முறையும் சார்ட் செட்டிங்கை கட்டமைக்கவும்
- ✓ C. பொதுவாகப் பயன்படுத்தப்படும் ஒவ்வொரு சார்ட் ஆர்டருக்கும் (sort order.) ஒரு மேக்ரோவைப் பதிவுசெய்யவும்
- ✗ D. ஒவ்வொரு முறையும் விரும்பிய நெடுவரிசையை மேனுவலாக தேர்ந்தெடுத்து மற்றும் க்விக் சார்ட் பட்டனைப் (quick sort buttons) பயன்படுத்தவும்

**Q.115** முதன்மைப் பற்றாக்குறை என்பது நிதிப் பற்றாக்குறையிலிருந்து எதனைக் கழிப்பதன் மூலம் கணக்கிடப்படுகிறது?

Ans
- ✗ A. வருவாய்ப் பற்றாக்குறை
- ✗ B. மூலதன செலவு
- ✗ C. கடன் வாங்குதல்
- ✓ D. வட்டி செலுத்துதல்

**Q.116** இந்தியாவில் உள்ள கனிம வளத் திட்டங்கள் மற்றும் அவற்றின் இருப்பிடங்கள் அடங்கிய பின்வரும் இணைகளில் எது சரியாகப் பொருத்தப்பட்டுள்ளது?

Ans
- ✗ A. நெய்வேலி பழுப்பு நிலக்கரி திட்டம் – பஞ்சாப்
- ✓ B. குத்ரேமுக் இரும்புத் தாது திட்டம் – கர்நாடகா
- ✗ C. கோர்பா நிலக்கரி வயல் – ராஜஸ்தான்
- ✗ D. ராணிகஞ்ச் நிலக்கரி வயல் – குஜராத்

**Q.117** பின்வருவனவற்றிலிருந்து நாற்கரங்கள் (Quadrilaterals) குறித்த சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்.

A. ஓர் இருசமபக்கச் சரிவகத்தின் இணைப் பக்கங்கள் சமமாகும்.
B. பட்டம் என்பது ஒரு வகை இணைகரமாகும் .
C. அனைத்துச் சதுரங்களும் சாய்சதுரங்கள் ஆகும்.
D. ஒரு நாற்கரத்தின் பக்கங்களின் நடுப்புள்ளிகளை இணைப்பதால் உருவாகும் நாற்கரம் ஒரு சரிவகம் ஆகும்.

Ans
- ✓ A. C மட்டுமே
- ✗ B. A, B, D
- ✗ C. B, C
- ✗ D. A, D

**Q.118** பஞ்சாயத்து ராஜ் அமைப்பின் எந்த மட்டத்தில் மண்டல அல்லது பஞ்சாயத்துகள் செயல்படுகின்றன?

Ans
- ✓ A. இடைநிலை மட்டம்
- ✗ B. கிராம மட்டம்
- ✗ C. மாவட்ட மட்டம்
- ✗ D. பெருநகர மட்டம்

**Q.119** இந்தியாவில் நிர்வகிக்கப்பட்ட வட்டி விகிதங்களிலிருந்து சந்தை தீர்மானிக்கப்பட்ட வட்டி விகிதங்களுக்கு மாற பரிந்துரைத்த குழு எது?

Ans
- ✗ A. செல்லையா கமிட்டி (1991)
- ✗ B. கேல்கர் கமிட்டி (2002)
- ✓ C. நரசிம்மம் கமிட்டி I (1991)
- ✗ D. ரங்கராஜன் கமிட்டி (1997)

Get the Toppers Choice
BLACKBOOK VOCAB APP - Download Now
GET IT ON Google Play

Q.120 இந்த கேள்வி கீழே கொடுக்கப்பட்டுள்ள ஐந்து, மூன்று-இலக்க எண்களை அடிப்படையாகக் கொண்டது.

(இடது) 715 438 961 127 821 (வலது)
(எடுத்துக்காட்டு: 697 – முதல் இலக்கம் = 6, இரண்டாவது இலக்கம் = 9 மற்றும் மூன்றாவது இலக்கம் = 7)
(குறிப்பு: அனைத்து செயல்பாடுகளும் இடமிருந்து வலமாக செய்யப்பட வேண்டும்.)

மிகப்பெரிய எண்ணின் மூன்றாவது இலக்கத்தை மிகச்சிறிய எண்ணின் இரண்டாவது இலக்கத்துடன் கூட்டினால் கிடைப்பது என்ன?

Ans
✔ A. 3
✘ B. 10
✘ C. 9
✘ D. 6

"

Blackbook